கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

# EDU/S 3201 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும்

# Teaching Methods and Techniques

LIBRARY
01 JUN 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) "ஒரு நாட்டின் தேசிய இலக்கு வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் குறிக்கோளுடனான பரந்த எண்ணக்கருவாகும்." இக்கூற்றினை விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் தற்கால ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய நிலைமாற்று (Transformational role) வகிபாகத்தின் 5 பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

02.(அ) சகல கற்றல் கொள்கைகளும் பல்வேறு கற்பித்தல் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு வியாக்கியானம் செய்யப்படுகின்றன. இவ்வாறான கற்பித்தல் மாதிரிகள் அனைத்தும் முக்கியமாக நான்கு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. இப்பரிவுகளை சுருக்கமாக விளக்கி, அறிவுசார் களக்கொள்கையின் முக்கியமான நான்கு மாதிரிகளை எடுத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறை தொடர்பாடல் செயன்முறையைச் சிறப்பாக முன்னெடுக்க கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) கலைத்திட்டம், பாடத்திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு ஆகிய எண்ணக்கருக்கள் பற்றி சுருக்கமாக விளக்குக. தற்போதைய நிலைமையில் வகுப்பறைச் செயற்பாட்டில் ஆசிரியரினால் ஒழுங்கமைக்கப்படும் பாடக்குறிப்பின் முக்கிய விடயங்களை முன்வைத்து விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) கற்றல் - கற்பித்தல் நிகழ்ச்சியானது ஒரு "மூவழித்தொடர்பாடல்" (Three way communication) ஆகும். இதற்கு ஆதாரமான செயற்பாடுகளை முன்வைத்து விளக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உபயோகிக்கப்படும் சிறந்த முறைகளையே ஆசிரியர் கற்பித்தலுக்கு உபயோகிக்க வேண்டும். இதற்கு மாணவர்களின் சிந்தனை மிகவும் அவசியமாகும். சிந்தனையின் மிக உயர்ந்த கட்டமே ஆய்வுச் சிந்தனையாகும். ஆய்வுச் சிந்தனையில் மாணவர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை சுருக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) செயற்றிட்ட கற்பித்தல் முறையை விளக்கி, இம்முறைமூலம் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆற்றல்களை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

05.(அ) வினா வழிக்கற்பித்தல் முறையில் வினா கேட்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தலின் சிறப்பு கேட்கப்படும் வினாக்களின் தன்மையிலும் அவ்வினாக்கள் எவ்வளவு அக்கறையுடன் உருவாக்கப்பட்டுள்ள என்பதிலும் தங்கியுள்ளது." இதன்படி சிறந்த வினாவின் பண்புகளை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(இ) வினாக்களைக் கேட்கும் முறையில் ஆசிரியர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை கூறுக.

(05 புள்ளிகள்)

06.(அ) "கற்கின்ற பிள்ளையின் நலனுக்காக, அப்பிள்ளையைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்ற ஒரு உத்தியாக பிள்ளைகளுக்குத் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செயற்படும் வகையில் வேலைகளைப்பிரித்து அளித்தல் ஒப்படை எனப்படும்." மேற்குறிப்பிடப்பட்ட கூற்றில் பிரதான அம்சங்கள் நான்கு உள்ளடங்கியுள்ளன. அவற்றை எடுத்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) முன்திட்ட முறைக் கற்பித்தலில் மாணவர்களை ஒரே வழியில் படிப்படியாக முன்னெடுத்துச் செல்லப்படுவது நேர்த்திட்ட முறையாகும். இம்முறையில் அடக்க வேண்டிய பண்புகளை எவ்வாறு தொகுத்து செயற்படுத்துவீர் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

*****